


புதுமலர்: 21 இதழ்: 03 வைகாசி - ஆனி

# அனல்

01.05.2024

ஆசிரியர்:
போதகர் வே:மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -

## தனிமையின் நேரங்களை மகிமையின் நேரங்களாக்குங்கள்!

சீயோன் தேவாலயப் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


01. அனலின் குரல்
02. கதையும் கற்றதும்
03. நற்செய்திப்பகுதி
04. சிறுவர் வட்டம்
05. வினா விடை - 121
06. குறுக்கெழுத்துப்போட்டி - 119
07. வாலிபர் வளாகம்
08. பெண்கள் பக்கம்
09. அருட்பணியாளர் சரிதை
10. அனலின் ஆன்மீக விருந்து
11. மன்னிப்போம்; மறப்போம்




## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:


**சீயோன் ஜெபக்குழு,**
**இல 29, 29/1,**
**இராமையாச் செட்டியார் ஒழுங்கை,**
**யாழ்ப்பாணம், இலங்கை.**

Zion Prayer Group,
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.


### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


ஆசிரியர் "அனல்",
இல 29, 29/1, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம், இலங்கை.

The Editor "Anel",
No: 29, 29/1 Ramaiah Chettiar Lane,
Jaffna, Sri Lanka.

T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை விட்டுவிடு, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்.
உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் குரல்

உன்னதமான இரட்சகர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கறை, திறை, பிழையற்ற இயேசுவுக்கு ஸ்தோத்திரம். மனுக்குலத்தை பாவசேற்றில் இருந்து தூக்கி எடுப்பதற்காக பாவமற்றவராகிய இயேசு தன்னை அர்ப்பணித்தார். கீழ்ப்படிந்தார், தம்மைத் தாழ்த்தினார். மாத்திரமல்ல எல்லா நீதியையும் நிறைவேற்றினார் (மத்தேயு 3:14-15). இயேசு சொன்னார்: **'எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாய் இருக்கிறது'.**

இயேசு எப்போதுமே பரிசுத்தர், அவர் நீதியாகவே இருப்பவர். அதிகாரத்தில் அவரைவிட யாரும் இல்லை. ஆனால் அவர் கிறிஸ்தவன் எப்படி இருக்க வேண்டும் - வாழ வேண்டும் என முன்மாதிரி காண்பித்திருக்கின்றார்.

அருமையான சகோதர சகோதரிகளே எங்களை வாழ வைப்பவரும் அவர் தான்; எப்படி வாழ வேண்டுமென வாழ்ந்து காட்டியவரும் அவர்தான். முழுமனதுடன் இயேசுவின் நடத்துதலுக்கு உங்களை விட்டுக்கொடுங்கள். இயேசுவை உண்மையாக பின்பற்றும் நபர் மாயமற்ற பரிசுத்தராக வாழ முடியும். கிறிஸ்துவைப் போல வாழ்கிறோம் என்பது மனத் தளவிலும் செயலளவிலும் நிரூபிக்கப்பட வேண்டிய நிலையாகும், உள்வாழ்விலும் வெளிவாழ்விலும் உண்மையாக இருப்பதாகும்.

- ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதையும் கற்றதும்

## நேர்மையாக வாழுங்கள்

▢ வை. விமலதாஸ்

ஒரு வியாபாரி தான் பயணம் செய்ய ஒட்டகம் ஒன்றை வாங்கிவர சந்தைக்குச் சென்றான். ஒட்டக வியாபாரியிடம் அப்படி இப்படி என பேரம் பேசி நல்ல விலைக்கு ஒரு ஒட்டகத்தை வாங்கிக் கொண்டு ஓட்டி வந்தான்.

ஒட்டகம் வாங்கிய வியாபாரிக்கோ மகிழ்ச்சி. நியாயமான விலையில் நல்ல தரமான ஒட்டகம் கிடைத்தது என்று.

வீட்டுக்கு வந்ததும் தன் வேலையாளை அழைத்து ஒட்டகத்தை கொட்டிலில் அடைக்க சொன்னான். அதற்கு முன்பாக ஒட்டகத்தின் மேலிருந்த சேணத்தை அவிழ்க்க முயற்சித்தான். அவனால் முடியவில்லை.

எனவே தன் வேலையாளை ஒட்டகத்தின் சேணத்தை அவிழ்க்கும்படி சொன்னான்.. ஒட்டகத்தின் மீதிருந்த சேணத்தை அவிழ்த்த வேலையாள், பொத் என ஏதோ கீழே விழுவதை கண்டு எடுத்துப் பார்த்தான். அவனுக்கு மிகுந்த ஆச்சரியம்!

அது ஒரு சிறிய பொக்கிஷப்பை. உள்ளே பிரித்தால், ஆச்சரியத்தால் அவன் கண்கள் விரிந்தது. ஆம் அதற்குள் விலை மதிப்பற்ற நவரத்தின கற்கள். தகதகவென மின்னியது.

அதை எடுத்து கொண்டு முதலாளியிடம் ஓடி வந்து காண்பித்தான்.

உடனே வியாபாரி, 'அந்த பையை இப்படி கொடு. உடனே அந்த ஒட்டக வியாபாரியிடம் கொடுக்க வேண்டும்' என்று சொல்லி புறப்பட்டான்.

பணியாளோ, 'ஐயா! இது யாருக்கும் தெரியப்போவதில்லை. இது கடவுள் கொடுத்த பரிசு. நாமே வைத்து கொண்டால் என்ன? இதில் நீங்கள் அதிகமாக வைத்துக் கொண்டு எனக்கும் கொஞ்சமாகக் கொடுங்கள்' என மிகவும் வற்புறுத்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் அந்த வியாபாரியோ ஒத்து கொள்ளாமல், தான் வாங்கிய ஒட்டக வியாபாரியைப் பார்த்து அதனை மீளவும் ஒப்படைக்கப் புறப்பட்டுப் போனான்.

ஒட்டக வியாபாரியிடம் சேணத்தை அவிழ்த்த போது கிடைத்த பொக்கிஷப் பையை கொடுத்ததும் நன்றியோடு வாங்கி கொண்டவன், அந்த பொக்கிஷப் பையை வியாபாரியிடம் கொடுத்து, 'உங்கள் நேர்மையை நான் பெரிதும் மெச்சுகிறேன். தங்களுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்புகிறேன். இதிலிருந்து உங்களுக்கு பிடித்தமான கற்களை சிலவற்றை எடுத்து கொள்ளுங்கள்' என்று நீட்டினான்.

அதற்கு அந்த வியாபாரியோ சிரித்துக் கொண்டே 'உங்களிடம் இந்த பொக்கிஷத்தை மீளவும் தரும் முன்பே இரண்டு விலையுயர்ந்த ரத்தினங்களை நான் எடுத்து வைத்து கொண்டேன்' என்றான்.

உடனே ஒட்டக வியாபாரி ரத்தினக் கற்களை எண்ணிப் பார்த்தான் அதில் எதுவுமே குறையவில்லை. சரியாக இருந்ததைக் கண்டு குழம்பினான்.

உடனே அந்த வியாபாரி -

'நான் சொன்ன இரண்டு ரத்தினங்கள்...

1. எனது நேர்மை.

2. எனது சுயமரியாதை

என்றான்' கம்பீரமாக சிறிது கர்வமாகக் கூட.

ஆம் நண்பர்களே, நாம் நேர்மையாளனாக வாழ்வது பெரிய விடயமல்ல. ஆனால் தவறு செய்யக்கூடிய சந்தர்ப்பமும் வாய்ப்பும் கிடைத்தாலும் அதன் மத்தியில் நேர்மையாக வாழ வேண்டும். கடந்த நாட்களை திரும்பி பாருங்கள்... உங்கள் வாழ்க்கை நேர்மையாக இருந்திருக்கிறதா? பிறருக்குரிய காரியங்களை நீங்கள் உரிமை கோரி உங்களுடன் வைத்திருக்கிறீர்களா? அது மற்றவர்களுடைய பொருள் - கனம் - மரியாதை எதை உங்களுடையதாக்கி இருக்கின்றீர்கள். அதனை மீளவும் உரியவருக்கு செலுத்தாதவரை நீங்கள் நேர்மையற்றவரே. நேர்மையாளனாய் வாழும் போது நீங்கள் மட்டுமல்ல உங்கள் சந்ததியும் ஆசீர்வதிக்கப்பட்டதாயிருக்கும்.

**1இராஜாக்கள் 3:6 அதற்குச் சாலொமோன்: என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒடுக்கப்படுகிறவர்களுக்கு நீதி செய்யும் தேவன்!

☐ பர்னபா




கிறிஸ்துவுக்குள் அன்பின் நற்செய்தி வாசகர்களுக்கு அனலின் மூலமாக இனிய நல் வாழ்த்துக்கள்.

நாட்டிலே அசாதாரணமான வெப்பநிலை, ஆனாலும் தேவன் நம் ஒவ்வொருவரையும் இதுவரை கிருபையாக பாதுகாத்து சுகபெலன் தந்து சமாதானத்தோடு நடத்தி வருகின்றார். அவருக்கே மகிமையுண்டாவதாக. ஆமென்.

**சங்கீதம் 103:6 ஒடுக்கப்படுகிற யாவருக்கும், கர்த்தர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறார்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இந்த பூமியிலே உங்களுக்கு சரியான நியாயம் கிடைக்காமல் போகலாம். உங்களுடைய நன்மைகள் பெரிதாக பார்க்கப்படாமல், அலட்சியம் செய்யப்படலாம். அல்லது ஒருவேளை தூஷிக்கவும்படலாம். நம்மைவிட மேலானவர்கள் நீதி செய்வார்கள் என்று எதிர்பார்த்து வேதனையின் முடிவோடு இருக்கலாம். காரணமில்லாமல் துன்பப்படுத்தப்பட்டுக கொண்டு, தூற்றப்பட்டு, குற்றவாளி போலவும் காணப்படலாம்.

ஆனாலும் ஒன்றே ஒன்றை எப்பொழுதும் உறுதியாக நம்பியிருங்கள். **'தேவன் ஒடுக்கப்படுகிறவர்களுக்கு நீதியும் நியாயமும் செய்கிறவர்'** என்பதாக.

பிரசங்கி சாலமொன் சொல்கின்றார்: **பிரசங்கி 4:1 இதற்குப்பின்பு நான் சூரியனுக்குக்கீழே செய்யப்படும் கொடுமைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்தேன்; இதோ, ஒடுக்கப்பட்டவர்களின் கண்ணீரைக் கண்டேன், அவர்களைத் தேற்றுவாரில்லை; ஒடுக்குகிறவர்கள் பட்சத்தில் பெலம் இருந்தது, அப்படியிருந்தும் தேற்றுவாரில்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவேளை நீங்களும் உங்கள் வாழ்க்கையில் கணவனாலே ஒடுக்கப்பட்டுக்கொண்டு இருக்கின்றீர்களா? பிள்ளைகளாலே ஒடுக்கப்படுகின்றீர்களா? அல்லது உறவுகளாலே மோசமாக ஒடுக்கப்படுகின்றீர்களா? வேலை செய்யும் ஸ்தலத்திலே மேலானவர்களால் அல்லது சக மனிதர்களால், சுற்றியுள்ள சமுதாயத்தால் ஒடுக்கப்படுகின்றீர்களா? அல்லது நீங்கள் நம்பியிருந்தவர்களால் காரணமில்லாமல் ஒடுக்கப்படுகின்றீர்களா?

இங்கே உங்களை தேற்றுவாரில்லை ஆனாலும் ஒருவர் இருக்கிறார் தேற்ற. அவர் நீங்கள் நம்ப வேண்டிய, நேசிக்க வேண்டிய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.

**அவர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறவர்.**

இந்த பூமியிலே நாம் யாரை ஒடுக்கக்கூடாது என்று தேவன் சொல்லியிருக்கிறார்.

**01. விதவையையும் திக்கற்ற பிள்ளையையும் ஒடுக்கக்கூடாது - யாத்திராகமம் 22:22**

**02. பிறனை அல்லது அந்நியனை ஒடுக்கக்கூடாது - யாத்திராகமம் 23:9**

**03. கூலிக்காரனை அல்லது வேலைக்காரனை ஒடுக்கக்கூடாது – உபாகமம் 24:14**

தேவ பிள்ளைகளாக நாம் யாருக்கும் ஒடுக்கத்தை, மரண வேதனையை உண்டாக்காமல் இருப்போமாக.

ஏனென்றால் 'தேவன் ஒடுக்கப்படுகிற யாவருக்கும் நீதியையும் நியாயத்தையும் செய்வார்'. நாம் குற்றவாளிகளாக காணப்படுவோமே.

நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் ஒடுக்கப்பட சில காரணங்களுண்டு.

## 01. நாம் ஒடுக்கப்படுவது தேவ சித்தம்

**உபாகமம் 26:6-7 (6.) எகிப்தியர் எங்களை ஒடுக்கி, எங்களைச் சிறுமைப்படுத்தி, எங்கள்மேல் கடினமான வேலையைச் சுமத்தினபோது, 7. எங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டோம்; கர்த்தர் எங்கள் சத்தத்தைக் கேட்டு, எங்கள் சிறுமையையும் எங்கள் வருத்தத்தையும் எங்கள் ஒடுக்கத்தையும் பார்த்து.**

ஆம் பிரியமானவர்களே இஸ்ரவேலர்கள் எகிப்தியரால் ஒடுக்கப்பட்டு, அடிமையாக கடினமாய் நடத்தப்பட வேண்டும் என்பது தேவனுடைய தீர்மானம் - திட்டம் - சித்தம்.

ஒருவேளை உங்கள் வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட நெருக்கத்திற்குள்ளாக ஒடுக்கத்திற்குள்ளாக நீங்கள் செல்லக்கூடும்.

இஸ்ரவேலருக்கு ஒடுக்கத்தை, வேதனையை அனுமதித்த தேவன் அதிலிருந்து ஒரு நாள் விடுதலையையும் ஆயத்தப்படுத்தியிருந்தார். ஆமென்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கினவர்களை ஒதுக்கினார். ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஒத்தாசை பண்ணினார்.

ஆம் பிரியமானவர்களே தேவ சித்தப்படி கடந்து போகும் உங்கள் வாழ்க்கையிலும் தேவன் கிரியை செய்ய ஒரு நேரமுண்டு அது சரியான நேரமே.

**ஏசாயா 53:7 அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப்போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.**

அன்பானவர்களே இயேசு இந்த பூமியிலே ஒடுக்கப்பட்டு நெருக்கப்பட்டு அவமானமடையும்படி தன்னை பூரணமாக ஒப்புக்கொடுத்தார். ஏனென்றால் அது தான் தன்னைக் குறித்த தேவ சித்தம் என்பது தான்.

வேளை வந்தது இயேசுவை தேவன் எல்லா நாமங்களுக்கும் மேலாக உயர்த்தி, வானோர், பூதலத்தோர், பூமியின் கீழானோர் யாவரும் முழங்கால் படியிடும்படியாக அவரை மகிமைப்படுத்தினார்.

எனவே பிரியமானவர்களே உங்களுக்கு உண்டாகும் ஒடுக்கம், நெருக்கத்தில் தேவ சித்தத்தை நிறைவேற்றி மகிமையான ஆசீர்வாதத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

## 02. பாவத்தினாலே ஒடுக்கப்படுவோம்

இஸ்ரவேலர் பாவம் செய்தபடியால் தேவன் அவர்களை ஒடுக்கும்படியாக மீதியானியர், மோவாப்பியர், பெலிஸ்தியர், கானானியர் என இப்படி பல மக்களிடம் ஒப்படைத்தார். காரணம் தொடர்ச்சியான பாவ வாழ்க்கை, மனந்திரும்பாத நிலை, இருதயத்தை கடினப்படுத்திய செயல். எனவே தேவன் அவர்களை தண்டிக்க வேண்டியதாயிருந்தது.

**உபாகமம் 28:29C உதவிசெய்வாரில்லாமல் நீ எந்நாளும் ஒடுக்கப்படுகிறவனும் பறிகொடுக்கிறவனுமாய் இருப்பாய்.** காரணம் என்ன – பாவம்.

சிலவேளை தேவன் உங்களை சில ஒடுக்குதல், நெருக்கத்திற்குள்ளாக அனுப்புவார். நீங்கள் மனந்திரும்ப வேண்டும் என்பதே தேவனின் எதிர்பார்ப்பு. உங்களை அழிய விடுவதல்ல.

எனவே பிரியமானவர்களே நீங்கள் ஒடுக்கப்படுவது தேவ சித்தமானால் பொறுமையாக நீதியையும் நியாயத்தையும் செய்பவருக்கு காத்திருங்கள்.

ஒருவேளை நீங்கள் ஒடுக்கப்பட்ட உங்கள் வாழ்க்கையின் பாவ பழக்கங்கள் காரணமாக இருக்குமானால் உடனே மனந்திரும்புங்கள்.

ஒருவரையும் ஒடுக்காதிருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜாவின் பூந்தோட்டம்

❑ ஜசிந்தா அக்கா




இம்... என்ன... நறுமணம்... மல்லிகையைப் பார்க்க எவ்வளவு அழகாக இருக்கிறது. அதன் வெண்மை நிறம் ஜொலிக்கிறது. சி... நான் சிவப்பாய் இருக்கிறேனே... சிவப்பு நிறம் எனக்குப் பிடிக்கவே இல்லை. நான் மல்லிகையைப் போல் இருக்கத்தான் விருப்பம் என்றது ரோஜா மலர். செவ்வந்தியும் உயரமான மரங்களைப் பார்த்து: 'நானும் உயரமாக இருந்தால் அழகாய் இருப்பேனே, கட்டையாக இருக்கிறேனே...' என்று மனதில் கசந்து கொண்டது. உயரமும் அடர்த்தியுமாய் இருந்த செம்பரத்தை மரம் தான் சிலிர்த்துப் பூத்து அழகாய் இருப்பதை மறந்து 'நான் கட்டையாய் இருந்தால் நலமாய் இருக்கும்' என்று நினைத்து வாடி நின்றது.

இவ்வாறாக பூந்தோட்டத்தில் நின்ற மரங்கள் பூக்கள் தங்கள் மேன்மைகளையும் ஸ்தானங்களையும் உணராமலும் சந்தோஷப்படாமலும் ஒருவரை ஒருவர் பார்த்து நான் மற்றைய மரங்களைப் போல் இல்லையே, பூக்களைப் போல் இல்லையே என்று திருப்தியில்லாமல் சோர்ந்து, வாடி, செழிப்பில்லாமல் நின்றன.

மன மகிழ்ச்சியான காலை நேரம் ராஜா தன் தோட்டத்தில் உலாவி மனம் மகிழ வந்தார். மனம் மகிழ வந்த ராஜா துக்கத்தில் ஆழ்ந்து போனார். 'இவர்கள் எல்லாருக்கும் நான் என்ன குறைவிட்டேன்? ஏன் சோர்ந்து வாடி நிற்கிறார்கள்' என்று தனது மனதில் நினைத்துக் கொண்டு ஒவ்வொரு மரங்களோடும் பேச ஆரம்பித்தார். மரங்கள் தங்கள் விருப்பங்களைக் கூறின. ராஜா எல்லாவற்றையும் கவனித்துக் கேட்டு சுற்றிப்பார்த்து; லில்லிப்பூ இருந்த இடத்திற்கு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில்லியை உற்று கவனித்தார். லில்லிப்பூவே தோட்டத்திலே எல்லா மரங்களும் சோர்ந்து வாடி நிற்கின்றன. நீ மாத்திரம் எப்படி சந்தோஷமாயும் செழிப்பாயும் இருக்கிறாய்? உன்னைப் பார்க்க எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

ராஜாவே இந்த இடத்தில் ஒரு லில்லி மரத்தை வைக்க வேண்டும் என்று விரும்பி நீர் என்னை வைத்ததினால் உமக்கு பிரியமான சின்ன லில்லிப்பூவாக இருக்கத் தீர்மானித்தேன். ஆகவே மன மகிழ்ச்சியாய் இருக்கிறேன்.

ஆ.... என் மனதைக் கவர்ந்து கொண்ட லில்லி மலரே என் அரன்மனையில் உனக்கு ஒரு இடம் உண்டு. அங்கு உன்னைக் கொண்டு போய் வைக்கிறேன் என்றார் ராஜா.

அன்பான இயேசப்பாவின் செல்லப்பிள்ளைகளே நீங்களும் மற்றவர்களைப் போலவே இருக்க வேண்டும் என்று கவலைப்படாமல் சின்ன லில்லி மலரைப் போல் இயேசு உங்களை எப்படி எங்கு வைக்கிறாரோ அப்படியே அவருக்குப் பிரியமாய் இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்களைப் பரலோகம் கொண்டு போய் சேர்ப்பார்.

**வெளிப்படுத்தல் 3:11 இதோ, சீக்கிரமாய் வருகிறேன், உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு.**

---

## வினா விடை - 121

01. யார் கர்த்தருக்குப் பிரியமானவர்கள்?

02. யார் மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்?

03. 'கர்த்தர் உங்களுக்கு சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக' என்றது யார்?

04. ஆடு மாடுகள் பெருத்தவனாயிருந்த ராஜா யார்?

05. 'என் ஜெபத்திற்கு வழியை அடைத்துப்போட்டார்' என்றது யார்?

06. 'தேவனுக்கு பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிருக்கிறவன்' யார்?


07. 'ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார்' என வாசிப்பதெங்கே?

08. 'இஸ்ரவேலின் சபையையெல்லாம் ஆசீர்வதித்தவன்' யார்?

09. 'அவன் ஆசீர்வாதத்தை விரும்பாமற்போனான்' யார்?

10. எவை ராஜாக்களுக்குப் பிரியம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இடமிருந்து வலமாக**

## குறுக்கெழுத்துப் போட்டி 119

01. இஸ்மவேலின் குமாரரில் ஒருவன்
04. 'கர்த்தர் தம்முடைய வார்த்தையை மாத்திரம் நிறைவேற்றுவாராக' என்று கூறியவன்
06. 'தன் ........... தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.
08. கர்த்தருடைய அக்கினி அவர்களுக்குள்ளே பற்றியெரிந்ததால் அந்த இடம் இவ்வாறு பெயரிடப்பட்டது
09. 'நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய்' என்று கூறியவர்
12. இந்த புத்திரருடைய சுதந்திரம் யூதா புத்திரரின் பங்கு வீதத்திற்குள் இருக்கிறது.

**வலமிருந்து இடமாக**

03. 'உம்முடைய இருதயத்தில் இருக்கிறதையெல்லாம் செய்யும்' என தாவீதிடம் கூறியவன்
05. 'நானோவென்றால் போக்குவரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்' எனக் கூறியவன்
07. இடிமுழக்க மக்களென்று பெயரிடப்பட்டவர்களில் ஒருவர்
08. ஆபிரகாமின் வீட்டு விசாரணைக் கர்த்தன் இவ்வூரான்
10. பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன்
11. இவன் 1000 பிரபுகளுக்கு முன்பாக திராட்சை ரசம் குடித்தான
13. யூதாவின் இந்த பட்டணத்திற்கு போகும்படி கர்த்தர் தாவீதிடம் கூறினார்

**மேலிருந்து கீழாக**

01. 'நான் முன் ஒருபோதும் அவர் சமூகத்தில் துக்கமுகமாய் இருந்ததில்லை' எனக் கூறியவன்
02. அமத்சியாவின் தாய்


**கீழிருந்து மேலாக**

09. 'உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும்' என விண்ணப்பம் பண்ணியவன்
12. 'இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும்' என கர்த்தரிடம் கூறியவன்
13. 'நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னை பலுகப்பண்ணினார்' என்று சொல்லி இளையவனுக்கு இவ்வாறு பெயரிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❑ போதகர் வை.தேவதாஸ்




அன்புள்ள அனல் சஞ்சிகை வாசகர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் சுகமாக இருக்க வேண்டும் என இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகின் றேன்.

வழமையாக வாலிபர் வளாக பகுதியில் ஓர் வாக்குத்தத்தத்தையும் அதற்கான சிறு தியானத்தையும் பகிர்ந்து கொண்டதன் பிற்பாடு எமது தொடர் வேதாகம பாடத்திற்குள் செல்வதுண்டு. அது உங்கள் அனைவருக் கும் தெரிந்ததே. ஆனால் இனிவரும் நாட்களில் அவை களை தொடர்ந்து பிரசுரிக்க முடியாதுள்ளது என்பதை தாழ்மையுடன் தெரியப்படுத்துகின்றேன்.

ஏனெனில் பல நியாயமான காரியங்களை முன்வைத்து வாலிபர் வளாக வேதபாடத்தினை வழமையை விட சற்று குறைக்கவுள்ளோம். ஆகையினால் வழமை போல் வாக்குத்தத்த வசனங்களை பகிர்ந்து கொள்ள முடியாதுள்ளது என்பதனை தெரியப்படுத்துகின்றோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தொடர்ந்தும் வாலிபர் வளாக வேதபாடத்திற்குள் நுழைவோம் வாருங்கள்,

எமது வாழ்வில் நாம் எதனைத் தெரிவு செய்வது? எப்படிப்பட்ட தீர்மானங்களை எடுப்பது? ஒவ்வொரு நாளும் ஏதோவொரு முடிவை எடுக்க வேண்டிய சூழ்நிலையில் நாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்றோம். இச் சூழ்நிலையில் நாம் எடுக்கும் தீர்மானமானது எமது வாழ்வையே மாற்றிவிடும் சக்தி கொண்டதாகும். ஆகவே நாம் எமது வாழ்வில் நல்ல தீர்மானங்களை எடுக்க வேண்டும் என உங்களுக்கு எழுதியிருந்தேன்.

அந்த வகையில் வேதாகமத்தில் இருந்து ஆதாம் - ஏவாள் எடுத்த முடிவையும்; ரெகொபெயாம் எனும் ராஜா எடுத்த முடிவையும் குறித்து தற்பொழுது பார்த்து வருகின்றோம்.

எமக்குள் எழும்பும் உணர்வுகளை சரியாக கையாள முடியாத உணர்வுகளின் போராட்டத்தில் நாம் இருக்கும் பொழுது அவ் உணர்வுகளை நல்ல முறையில் தூண்டக்கூடிய நல்ல மனிதர்களும் இருப்பார்கள். தீய முறையில் தூண்டக்கூடிய கெட்ட மனிதர்களும் இருப்பார்கள். ரெகொபெயாமின் உணர்வுகளை முதியோர் நல்ல முறையில் தூண்ட முயற்சித்தார்கள். அதற்கு ரெகொபெயாம் விட்டுக்கொடுக்கவில்லை. முதியோரின் புத்திமதிக்குச் செவிகொடுக்காத ரெகொபெயாம் வாலிபர்களை நாடினான். வாலிபர்கள் அவனது உணர்வுகளைத் தீய முறையில் தூண்டினார்கள். இதனைக் குறித்து விளக்கமாக உங்களுக்கு எழுதியிருந்தேன்.

ரெகொபெயாமின் சம்பவங்களை முடிக்கும் முன்பதாக அம்னோனைக் குறித்தும் சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். அந்த வகையில் அம்னோன் வாலிப உணர்வுகளினால் போராடிக்கொண்டிருக்கும் பொழுது அவனது உணர்வுகளை தீய முறையில் அவனது சிநேகிதன் கொதிப்பேற்றினதைக் குறித்து கடந்த இதழில் பகிர்ந்து கொண்டேன்.

தனக்குள் எழும்பியிருந்த உணர்வுகள் சரியா? பிழையா? எதனை முடிவு செய்வது என்ற குழப்பத்தில் அம்னோன் இருக்கும் பொழுது முதலாவது தன்னைப் படைத்து தனக்கு வழிகாட்டி வரும் தேவனுடைய பாதத்திற்குப் போயிருக்க வேண்டும் என்பதனை உங்களுக்கு காண்பித்திருந்தோம். அது தான் அவனது வாழ்வில் முடியாதிருந்தால் இரண்டாவதாக தனது பெற்றோரின் உதவியை நாடியிருக்க வேண்டும் என்பதனைக் குறித்து கடந்த இதழில் பார்த்தோம். அதனையும் அவன் செய்யவில்லை. இவை இரண்டையும் அவனால் செய்ய முடியாதிருந்த போது மூன்றாவதாக அவன் இன்னுமொரு பகுதியினரை உதவிக்கு நாடியிருக்க முடியும். அதனைக் குறித்து வரும் பகுதிகளில் பார்ப்போம்.

## 03. ஆவிக்குரிய தலைவர்களின் ஆலோசனைகளை கேட்டிருக்கலாம்

வாலிப வயதில் இருந்த அம்னோன் தனது சகோதரி முறையான தாமார் மேல் காதல் உணர்ச்சி கொண்டான். இந்த உணர்வை கையாளும் பக்குவம் அவனுக்கு இல்லாதபடியினால் எதனையும் சரியாகச் செய்ய முடியாதவனாகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவதற்கோ, தூங்குவதற்கோ கூட முடியாதவனாகத் தவித்துக் கொண்டிருந்தான். நாளுக்கு நாள் அவனது உடல் மெலிந்து கொண்டே போனது.

இந்த சூழ்நிலையில் அம்னோனிட்கு நிச்சயம் சரியான ஆலோசனை தேவையாக இருந்தது. தன்னைத் தேடி வந்து ஆலோசனை சொல்ல வேண்டும் எனக் காத்திருக்காமல் அவனாக ஆலோசனைக் கர்த்தரைத் தேடிப் போயிருக்கலாம்.

ஜெபத்தின் மூலமாகத் தன் தேவனை தேடியிருக்கலாம். அல்லது தன் பெற்றோரிடம் மனந்திறந்து கதைத்திருக்கலாம். அதுவும் இல்லாதுவிடில் தன் ஆவிக்குரிய தலைவர்களை நாடியிருக்கலாம்.

பிரியமான வாலிபப்பிள்ளைகளே உங்கள் வாழ்வில் வரும் காதல் உணர்வுகளை சரியாகக் கையாளக் கற்றுக் கொள்ளுங்கள். 'காதல் தான் கெத்து' என நினைக்க வேண்டாம். உங்கள் வாழ்வின் அடுத்த பகுதியை இந்த காதல் எனும் காரியம் விழுங்கிவிடும் அபாயம் உள்ளது.

**ஏசாயா 30:20 உன் கண்கள் உன் போதகர்களைக் காணும்.**

எனும் வேதாகம வசனத்தின்படி பிள்ளைகளே உங்கள் போதகர்களை காணக்கூடியவர்களாக இருங்கள். சரியான ஓர் முடிவை எடுக்க முடியாதவர்களாய் தவித்துக் கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள்; பயப்படாதிருங்கள். கர்த்தர் உங்களுக்கு தந்திருக்கின்ற நல்ல போதர்களை நாடுங்கள். அவர்கள் உங்களுக்கு நல் வழிகளைப் போதிப்பார்கள்.

ஒருமுறை ஒரு சகோதரன் வெளிநாடு செல்வதற்கான சகல ஆயத்தங் களையும் செய்திருந்தார். இந் நிலையில் எதேச்சையாக எனக்கு அதனைத் தெரிவித்து ஜெபிக்கும்படி கேட்டிருந்தார். நானும் ஒரு சில நாட்களில் அவரைத் தொடர்பு கொண்டு இப் பிரயாணம் தேவ சமாதானம் அற்றது. பொறுத்திருங்கள் என்று சொன்னேன். அந்த சகோதரனும் கீழ்ப்படிந்தார். இப்போதும் சந்தோஷமாக வாழ்கின்றார்.

ஆம் பிள்ளைகளே! போதகர்களின் ஆலோசனைகளை கேட்பது மட்டுமல்ல; அதற்கு கீழ்ப்படிவதும் மிக மிக அவசியம் ஆகும். இன்று சிலர் நினைப்பது என்னவெனில் போதகர் எப்போதும் எங்களைக் குட்டிக்கொண்டே யிருப்பார், முன்னேறவிடமாட்டார் என்பதாக. ஆனால் உண்மையான போதகர் அப்படி ஒரு நாளும் செய்யமாட்டார். அவர் சொல்வதனைக் கேளுங்கள். உண்மையாக உங்களுக்கு ஊழியம் செய்யும் உங்கள் போதகர்களின் புத்திமதிகளை நீங்கள் வெறுக்கும் பொழுது ஒரு நாள் இவ் வசனத்தை நீங்கள் சொல்ல வேண்டி வரும். கவனியுங்கள்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமொழிகள் 5:12-14 (12.) ஐயோ, போதகத்தை நான் வெறுத்தேனே, கடிந்துகொள்ளுதலை என் மனம் அலட்சியம்பண்ணினதே!

13. என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணினவர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே!

14. சபைக்குள்ளும் சங்கத்துக்குள்ளும் கொஞ்சங்குறைய எல்லாத் தீமைக்குமுள்ளானேனே! என்று முறையிடுவாய்.

குறிப்பாக வாலிபப் பிள்ளைகளே! உங்கள் வாழ்வின் முக்கியமான சூழ்நிலைகளில் உங்களுக்கு நிச்சயம் நற்கட்டுப்பாடுகள் தேவை. இந்த நற்கட்டுப்பாடுகளை நீங்கள் விரும்ப வேண்டும். உங்கள் போதகருடன் எப்போதும் நெருக்கமான உரையாடல்களைக் கொண்டிருங்கள். அதேவேளை கள்ளப் போதகர்களும் இருப்பார்கள். முன்பு போல் இல்லாமல் இப்பொழுது கள்ளப் போதகர்கள் மிகவும் பெருகிவிட்டார்கள். அவர்களுக்கு நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மற்றபடி நான் சொல்வது உண்மையான ஊழியர்களைக் குறித்ததாகும்.

அம்னோன் கர்த்தரையும் தேடவில்லை, பெற்றோருக்கும் சொல்லவில்லை, தனது ஆவிக்குரிய தலைவர்களையும் நாடவில்லை. அப்பொழுது தான் அவனை நலம் விசாரித்து அவனுக்கு புத்தி சொல்ல தானாக ஒரு மனிதன் வருகின்றான். அவன் யார்? அவன் சொன்ன புத்திமதி என்ன? அவன் யாருக்கு அடையாளமாக இருக்கின்றான்? எனும் காரியங்களை கர்த்தருக்கு சித்தமானால் அடுத்து இதழில் பார்ப்போம். கிருபை உங்களோடிருப்பதாக.

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

அடிமையின் மகன் நானே – அரசியின் மகனும் நானே,
அரசியல்வாதியும் நானே – அடிமைகளின் இரட்சகனும் நானே –
நான் யார்?

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*

**அனல் 2024 பங்குனி – சித்திரை மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

ஜெபித்தது அனனியா
அப்போஸ்தலன் – பவுல்
(அப்போஸ்தலர் 9:10,17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளே... கவலை, பயம் எதற்கு?

❒ திருமதி. V.பிலிப்




இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். சகோதரிகள் எல்லோரும் தேவ கிருபையினால் நலமுடன் இருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் விசுவாசிக் கின்றேன்.

**1பேதுரு 5:8 தெளிந்த புத்தியுள்ளவர் களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக் கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.**

யூத ராஜசிங்கத்தை தெய்வமாக கொண்ட பெண்களாகிய நாங்கள் இந்த உலகத்தில் சிங்கங்களின் கெர்ச்சனைகளை பொருட்படுத்த தேவையில்லை. பொதுவாக சிங்கம் இரை அகப்பட்டாலோ; அல்லது இரை அகப்படாவிட்டாலோ அது தான் காட்டுக்கு ராஜா என்பதை காண்பிப்பதற்காக கெர்ச்சிக்கும்.

அதே போல எவனை விழுங்கலாமோ வென்று திரிகிற பிசாசானவனும் உலகம் தன்னுடைய ஆளுகைக்குட்பட்டு இருப்பதினால் எவனை விழுங்கலாமென்று வகை தேடி சுற்றிக்கொண்டிருக்கிறான். அதிலும் பெண் களாகிய உங்களை அவன் இரண்டு காரியங்கள் மூலம் விழுங்குவதற்கு கெர்ச்சிக்கிற சிங்கமாக வெளிப்படுவான்.

**01. கவலை**

**02. பயம்**

ஆகவே இக் கவலை, பயம் என்பவற்றை குறித்து சற்று விரிவாக தொடர்ந்து பார்ப்போம்.

## 01. கவலை

வேதாகமத்தில் கூட இந்த கவலை பெண்களை விட்டுவைக்கவில்லை என்றால் நீங்களும் நானும் எம்மாத் திரம். ஆகவே தான் ஆண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர் கவலையை மேற்கொள்ளும் வழியையும் வேதாகமத்தில் வைத்திருக்கிறார்.

**லூக்கா 10:41 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.**

இவ் அதிகாரத்தில் 38ஆவது வசனத்தில் மார்த்தாள் என்ற சகோதரி இயேசுசுவாமியை தன் வீட்டிலே ஏற்றுக் கொண்டாள் என்று வசனம் சொல்கின்றது. இன்றைக்கு பெண்களாகிய நீங்களும் உங்களுடைய வாழ்க்கைக்குள் ஆண்டவரை வரவழைத்திருக்க, ஏற்றுக்கொண்டிருக்க முடியும். ஆனால் அவருடைய பாதத்தில் இருக்க தவறினவளாக, அனேக காரியங் களைக் குறித்து கவலைப்பட்டுக் கலங்கினாள்.

**லூக்கா 10:39. அவளுக்கு மரியாள் என்னப்பட்ட ஒரு சகோதரி இருந்தாள்; அவள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து, அவரு டைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.**

மரியாளைப் போன்று தேவனுக்கும், அவருடைய பாதத்தில் உட்காருவதற்கும், வார்த்தையைக் கேட்பதற்கும் தவறி இருக்க முடியும். ஏனென்றால் தேவையற்ற காரியங் களிலே எங்களுடைய நேரத்தை செலவழித்து, தேவையற்ற காரியங்களை சிந்திப்பதற்கு, பார்ப்பதற்கு இடங்கொடுத்து ஆண்டவருக்கு நேரத்தை கொடுக்க தவறும் போது கவலை உங்களை இலகுவாக தாக்கிவிடும். அதனால் கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசு இலகுவில் உங்களை தாக்கி தேவனைவிட்டு தூரப்படுத்தி விடுவான்.

ஆனால் பெண்களாகிய நாங்கள் மரியாளைப் போல அவருடைய பாதத்தில் அமர்ந்திருந்து ஆண்டவரோடு உறவாடி வேதத்தை தியானித்து வாழும் போது எந்தக் கவலைகளும் உங்களை நெருங்க முடியாது.

## 02. பயம்

இன்றைய காலங் களில் பெண்களை அதிகமாக தாக்குவதுதான் இந்த பயம். சிலருக்கு எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற பயம். இன்னும் சிலருக்கு குடும்ப வாழ்க்கை என்னவாகுமோ என்ற பயம், பிள்ளைகளுடைய வாழ்க்கையை குறித்த பயம், தொழில் வாய்ப்புக்களை குறித்த பயம், குடி – வெறியற்ற வாழ்க்கைத்துணை அமை யுமா என்ற பயம். இப்படி பெண்களை அனேக பயங்கள் ஆட்கொள்ள முடியும்.

**ரூத் 3:11 இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டியபடியெல்லாம் செய் வேன்:** ஐசுவரியவானாகிய போவாஸ் ரூத்தைப் பார்த்துச் சொன்னான். இந்த சம்பவத் தின் ஆரம்பத்தை பார்த்தால் கர்த்தரை தன்னுடைய தெய்வ மாக நகோமி கொண்டிருந் தாலும் அவள் அவருடைய பாதத்தில் அமர்ந்து காத்திருந்து தேவனுடைய சித்தத்தை, திட்டத்தை பெற தவறியதின் விளைவாக இறுதியில் எல்லா வற்றையும் இழந்தவளாக நின்றாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த போவாஸ் இப்பொழுது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். இன்றைக்கு என்னையும் உங்களையும் உருவாக்கிய தேவன் சொல்கிறார்: **ஏசாயா 41:10 நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்;**

ஆனாலும் தான் செய்த தவறை மருமகளாகிய ரூத் செய்ய நகோமி விரும்பவில்லை. அதனால் தான் போவாசின் (இயேசுவுக்கு அடையாளமாக இருக்கிறார்) பாதத்தை பிடித்துக் கொள்ளும்படி ஆலோசனை கொடுக்கிறாள். ஆனால் அவளுடைய மருமகளாகிய ரூத்தோ போவாசின் பாதத்தண்டையிலே போய் தஞ்சமடைகிறாள். **ரூத் 3:8 பாதிராத்திரியிலே, அந்த மனுஷன் அருண்டு, திரும்பி, ஒரு ஸ்திரீ தன் பாதத்தண்டையிலே படுத்திருக்கிறதைக் கண்டு.** அதன்படியே ரூத்தும் செய்கிறாள். இதனால் மிகப்பெரிய ஆசீர்வாதத்தை ரூத் பெற்றுக்கொண்டாள்.

கர்த்தருடைய பாதத்லதை பிடித்தவர்கள் தோற்றுப்போனதாய் சரித்திரமே இல்லை. ஆகவே சகோதரிகளே எந்த சூழ்நிலையிலும் அவருடைய பாதத்தில் அமர்வதற்கு மறக்க வேண்டாம். எந்த சிங்கங்களின் கர்ச்சனைகளும் உங்களை ஒன்றும் செய்ய முடியாது. நிச்சயம் ஜெயம் பெற்றுக்கொள்வீர்கள்.

ஆகவே நாங்கள் எங்கள் வாழ்க்கையில் எதைக் குறித்தும் பயப்பட வேண்டிய, கலங்க வேண்டிய அவசியமில்லை.

**11தீமோத்தேயு 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.**

**ரோமர் 8:15 அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்.**

ஆகவே எதைக் குறித்தும் கவலைப்படவோ, பயப்படவோ அவசியமில்லை. நீங்கள் அவரால் தெரிந்தெடுக்கப்பட்ட, மீட்கப்பட்ட அவருடைய பிள்ளைகள். கெர்ச்சிக்கிற சிங்கமாகிய பிசாசிற்கு இடங்கொடுக்காமல் அவருடைய பாதமே தஞ்சம் என்று வாழும் போது அவர் தன்னுடைய நேர்த்தியான வழியில் கவலை, பயம், திகில் இன்றி நடத்த வல்லமையுள்ள தேவனாயிருக்கிறார்.





**மீட்பின் ஆண்டு - 2024**

**கர்த்தர் உன்னை உன் சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி மீட்பார்.**

**மீகா 4:10**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜான் கூட்டன்பர்க்
## 1398 - 1468



### புதுமைகளைச் செய்யுங்கள்

15ஆம் நூற்றாண்டு சரித்திரம், பல சாதனைகள் நிகழ்ந்த ஆண்டுகளை உள்ளடக்கியது. அறிவியல் உலகம் தன் கண்களை அகலத் திறந்த வருடங்கள் இதில் உள்ளன. இறைவன் பேசிய இனிய வார்த்தைகள் உலகத்தில் அச்சடிக்கப்பட்டது.

ஜான் கூட்டன்பர்க் என்ற மாமனிதரை ஆண்டவர் தெரிந்தெடுத்தார். சாதிக்க வேண்டும் என்ற துணிவும், செயலில் பொறுமையும், விவேகமும் கொண்டவர் இவர். உலகிற்கு ஓர் உன்னத கொடையை வழங்கத் திட்டமிட்டார். இரவு முழுவதும் கண்விழித்தார். தூக்கத்தை தூரத்தில் விரட்டினார். சிந்தனைகளை சிதறவிடாமல் ஒருமுகப்படுத்தினார்.

தோல் சுருளில் எழுதிய வேதாகமத்தைக் கொண்டு ஆண்டவரிடம் பேசினார். அற்புதமான ஆலோசனையைப் பெற்றார். ஆம், அச்சுக்கலையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

தோல் சுருளில் எழுதப்பட்ட வேத வசனங்களை கண்டுபிடித்து அவைகளை இறைவனின் பாதம் சமர்ப்பித்தார். மக்கள் ஒவ்வொருவரும் இவ் வேதாகமத்தை பெற்றிடவேண்டும் என்ற தணியா தாகம் கொண்டார். இவரின் கடின உழைப்பும், தரிசனப் பார்வையும் காண்போரை கவர்ந்திழுத்தன. பணப் பற்றாக்குறை அவரை பரிகாசம் செய்தது. ஏழ்மை மறுபுறம் இகழ்ந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதாகமத்தை அச்சுவடிவில் வெளிக்கொணர வேண்டும் என்பதே அவர் நோக்கமாகக் காணப்பட்டது. மரத்துண்டுகளால் எழுத்துக்களை உருவாக்கினார்.

காலங்கள் நகர்ந்தன. உலோக எழுத்துக்களை உருவாக்கினார். வேதப் புத்தகத்தின் பக்கங்களை அச்சில் ஏற்றினார். ஆச்சரியமான அதன் பக்கங்கள் அழகழகாக வெளிவந்தன. ஆண்டவரின் சித்தத்தை உணர்வுடன் படிக்கத்தக்கதாக 1454ஆம் ஆண்டு கூட்டன்பர்க் வேதாகமம் வெளிவந்தது. பல வருட உழைப்பு பலனைத் தந்தது. பரிகாசம் செய்தவர்கள் பவ்யமாய் நின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் பரமனை அறிந்தனர்.

**ஆண்டவர் உங்களையும் தமது பணியில் வித்தியாசமான செயல்களைச் செய்ய அழைக்கிறார். உங்களின் அர்ப்பணிப்பு உலகம் போற்றும் பல பணிகளைச் செய்யவும், அரும்பெரும் காரியங்களை சாதிக்கவும் வழிவகுக்கும். இது உண்மையன்றோ!**

**அன்பரே! கிறிஸ்து உங்களில் செயல்படும்போது சாதனைகள் மலருமல்லவா?**

வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கிறிஸ்து வாழ்கிறார் என்பதை வாயினால் சொல்.
அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல். — ஜீவநீரோடை

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 22**

---



# ஆபிரகாம் லிங்கன்
## 1809 - 1865

## ஜெபம் ஜெயத்தை தரும்

கடின முயற்சிகளும் விடாமுயற்சிகளும் முன்னேற்றத்தை தரும். ஆனால் ஜெபமோ ஜெயத்தைத் தரும். வாழ்க்கையின் முன்னேற்றத்தோடு கூடிய ஜெயம் நமக்கு அவசியம். பாவத்தை வென்று மகிழ்ச்சியடைய ஜெபமே சிறந்த வழியாகும். ஜெபத்தின் இரகசியத்தை அறிந்து கொண்டதினால் உயர்வு பெற்றவரே அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தன்னை மாற்றிய ஆபிரகாம் லிங்கன்.

பிறப்பிலே இவர் ஏழ்மை. ஒரே ஒரு வருடம் மட்டுமே பள்ளிக்குச் சென்றவர். சிறு வயதிலேயே வழக்கறிஞராக மாற வேண்டும் என்ற தீரா ஆசை கொண்டு வளரும் பருவத்தில் அதனை நிறைவு செய்தார். பல கால கட்டங்களில் பற்பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்விகள், ஏமாற்றங்கள், பரிகாசங்கள். ஆனால் இவர் எல்லாவற்றையும் கண்டு துவண்டுவிடாமல் சோதனைகளை சாதனைகளாக மாற்றிக் காட்டினார்.

1861ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களுக்காக உழைக்கத் தன்னை அர்ப்பணித்தார். ஆப்பிரிக்கர்களை அடிமைகளாகப் பயன்படுத்தி வந்த அநியாயச் செயலை அடியோடு ஒழித்தார். பிளவுபட்ட அமெரிக்காவை ஒன்றாக இணைத்தார்.

வேத வசனங்களின் மீது அபார நம்பிக்கை கொண்ட இவர், தன் பேச்சுக்கள் மூலம் வேத வசனங்களை மக்களிடம் பதியச் செய்தார். ஆண்டவருக்கு முதலிடம் கொடுத்த இவர் தன் அலுவலகத்தில் ஜெபிப்பதற்கென்று நேரம் ஒதுக்கினார்.

உள்நாட்டு, அயல்நாட்டுப் பிரச்சினைகள் நேர்ந்த போது முழங்கால் மூலமாகவே அவற்றிற்கு வெற்றி கண்டார். தன் வாழ்நாளில் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் மனிதராக வாழ்ந்து காட்டினார்.

இத்தகைய மாபெரும் விசுவாச வீரர் 1865ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் நாள் ஒரு நடிகனால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் மறைந்தாலும் அவர் ஏற்றிய சுதந்திர தீபம் இன்னும் அணையவில்லை.

**அன்பரே! ஆண்டவருக்குள் ஜெயம் பெற புறப்பட்டுவிட்டீரா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:** இன்றைய கடமையை தள்ளி வைப்பதால் நாளை கடமையிலிருந்து தப்பித்துவிட முடியாது. — ஆபிரகாம் லிங்கன்


**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" பிப்ரவரி 19**








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




❐ போதகர் வேதநாயகம் மகாராஜா




எங்களில் அனேகருக்கு சந்தோஷமாக இருந்த நேரத்தைவிட துக்கமாக இருந்த நேரம் தான் அதிகம். மாரியும் கோடையும் மாறி மாறி வருகிறது போல துன்பமும் இன்பமும் எங்களுடைய வாழ்க்கையில் தேவனால் அனுமதிக்கப்படுகிறது. பல வேளைகளில் பலரது ஆவி, ஆத்துமா, சரீரம் தனிமையாக வேதனைப்படுவதை பலரால் புரிந்து கொள்ளவே முடியாது. நீங்கள் தனிமையாக அல்லது குடும்பமாய் தனிமையை சுமந்து கொண்டிருக்கலாம். **"நீங்கள் தனிமையில் கைவிடப்பட்டிருப்பது இன்னொருவரால் புரிந்து கொள்ள முடியாது"**. உங்களுடைய உணர்வுகளின் வேதனையை இன்னொருவரிடம் பகிர்ந்து கொள்ளவும் முடியாது. ஒருவேளை நீங்கள் ஆசீர்வாதமாக இருப்பது போன்று மற்றவர்கள் பார்க்கலாம். ஆனால் அதன் வேதனையை தனிமையாக சுமப்பது நீங்கள் தான். உங்களுடைய வாழ்க்கையின் குறைவுகளை தனிமையாக நீங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுமந்து கொண்டிருக்கலாம். இந்த தனிமையின் நேரங்களை நன்மையின் நேரங்களாக பார்ப்பவர்கள் இருந்தால் அவர்களுக்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். **ஆனால் தனிமையின் நேரங்களை வேதனையின் நேரங்களாக, கைவிடப்பட்ட நேரங்களாக, ஆண்டவர் உங்களைக் கைவிட்ட நேரங்களாக சிந்தித்தால் இந்த வார்த்தைகள் உங்களை மாற்ற இடம் கொடுங்கள்.**

ஆண்டவர் உங்களைக் கைவிடவேயில்லை! தனிமையின் நேரங்கள் - நன்மையின் நேரமாக, அற்புதத்தின் நேரமாக இருக்கின்றது; அது குறைகள் நீங்கும் நேரமாக இருக்கின்றது. நாம் தேவனுக்குள் பலப்படுகின்ற நேரமாக இருக்கின்றது. தேவனோடுள்ள உறவை பலப்படுத்துகின்ற நேரமாக அது இருக்கின்றது. ஆயிரமாயிரமானவர்களுக்கு ஆசீர்வாதமாக, அவர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்காய் தேவன் உங்களைத் தனிமையின் பாதையில் நடத்துகின்றார்.

## 01. உயிர்மீட்சி பெற்றுக்கொள்ள சிலவேளை தனிமையின் அனுபவத்திற்குள் ஆண்டவர் கொண்டு செல்வார்.

**1இராஜாக்கள் 17:19 அதற்கு அவன்: உன் குமாரனை என்னிடத்தில் தா என்று சொல்லி, அவனை அவள் மடியிலிருந்து எடுத்து, தான் தங்கியிருக்கிற மேல்வீட்டிலே அவனைக் கொண்டுபோய், தன் கட்டிலின் மேல் வைத்து:**

விதவையின் மகன் மரித்தபோது எலியா தனிமையாக உயிரற்ற குழந்தையைத் தூக்குவதற்கு ஆயத்தமானார். அந்த மகனை தன்னுடைய இடத்திற்கு கொண்டு சென்றார். எலியா வேதனையின் நேரத்தில் ஒரு தனிமையை நாடினார். ஏன் இந்த தனிமையின் நேரத்தை எலியா ஏற்படுத்தினார் என்றால், உயிரற்ற சடலம் உயிர் பெறச்செய்வதற்காக, மரித்துப்போன மகனின் வாழ்விற்குள் மகிமை வெளிப்படும்படியாய் தனிமையை நாடினார்.

சூனேமியாளின் மகன் மரித்தபோது எலிசா செய்தது: **11இராஜாக்கள் 4:33 உள்ளே போய்த் தாங்கள் இருவருக்கும் பின்னாக கதவைப் பூட்டி, கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்து,**

பலருடைய யோசனை தனிமையாக இருப்பது என்பது கைவிடப்பட்டது, உயிரோடு செத்தது, நன்மைகள் அனுபவிக்க முடியாது என்பது பெரும்பாலனவர்களுடைய மனநிலையாக இருக்கின்றது. ஆனால் தேவனுக்காக தனித்துவமாக செயற்படவேண்டும், தேவனுக்காக அற்புதத்தை எதிர்பார்க்க வேண்டும் என்றால் நாங்கள் தனிமையில் பல காரியங்களைச் செய்ய வேண்டும். நிஜமாக


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரித்துப்போனவர்களை தனிமையில் அவர்கள் ஏற்றுக் கொண்டு சுமந்த தால் அற்புதத்தைக் கண்டு கொண் டார்கள்.

இயேசுவும் இப்படி செய் திருக்கிறார்.

**மாற்கு 5:40b எல்லாரையும் அவர் வெளியே போகப்பண்ணி, பிள்ளையின் தகப்பனையும் தாயையும் தம்மோடே வந்தவர்களையும் அழைத் துக்கொண்டு, பிள்ளையிருந்த இடத் தில் பிரவேசித்து.**

பெரும்பாலனவர்களை வெளியே போகப்பண்ணி, இயேசு அற்புதம் செய்தார். தனிமையில் நேரங்களை பார்க்கின்ற போது உயிரற்றவர்களுக்கு உயிர்கொடுக்கும் நேரங்களாக அமைந்தது. ஆவிக் குரிய ரீதியில் மரித்துப்போன என்னை யும் உங்களையும் ஒரு நாள் இயேசு உயிர்ப்பித்தார். இயேசு தனியாகவே எங்கள் பாவங்களைச் சுமந்தார். எங்களுடைய ஆவியினால் தேவனை அறிந்திருக்கிறோம், உயிரோடு அவரை அறியும்படியாக, உணரும் படியாக ஒரு ஆவிக்குரிய உயிரை உங்களுக்கு தந்திருக்கிறார். தனிமை யின் நேரங்களை கர்த்தர் உங்களுக்கு அனுமதித்திருக்கிறார் என்றால் இன் னொருவருடைய வாழ்வின் ஆத்துமா வின் உயிர்மீட்சிக்காக நீங்கள் செலவிட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். ஆண்டவருக்கு சித்த மானால் வருங்காலத்தில் நீங்கள் ஜெபிக்கின்ற போது மரித்தவர்களைக் கூட உயிர்ப்பிக்க முடியும். ஆனால் அதற்காக நாம் தனிமையில் தேவ னோடு நேரம் செலவிட வேண்டும்.

அற்புதத்திற்கு இதுதான் முறை என்று எலியா, எலிசா, இயேசு கிறிஸ்துவுக்கும் தெரிந்திருந்தது. கர்த்தர் உங்கள் வாழ்வில் சில முறைகளை எதிர்பார்க்கின்றார். நீங்கள் நடப்பிக்க வேண்டிய சில ஒழுங்கு முறைகளை உங்களுக்கு கற்றுத்தருவதற்காக கர்த்தர் தனி மையை அனுமதித்திருக்கிறார். யாரும் மரித்துப்போன உடலை தங்கள் கட்டிலின் மேல் அனுமதிக்க மாட்டார்கள். தேவனுடைய பிள்ளை களாய் மற்றவர்களுடைய வேத னையை சுமக்கும்படியாக, அவர் களுடைய நன்மைக்காய், ஜீவனை, அற்புதத்தைப் பெற்றுக் கொள்ளும் படியாக ஆண்டவர் உங்களைத் தனிமையில் வைத்திருக்கிறார். அன்னாளுக்கு கிட்டத்தட்ட 84 வயதாக இருந்தது. ஆனால் தேவனு டைய ஆலயத்தில் அவள் அனுதின மும் உபவாசித்து ஜெபித்தாள். '**நீங்கள் யோசித்து, யோசித்து அழுது நோய்வாய்ப்பட அல்ல: தனிமையாக உங்களை வைத் திருப்பது அன்னாளைப் போன்று தனிமையாக ஜெபிக்கும்படிக்கே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. குறைவுகள் நீக்கப்பட தனிமையின் அனுபவத்துக்குள் தேவன் எங்களை வைத்திருக்கிறார்.

ஆண்டவர் உங்களை தனிமை யாக்கி வைத்திருக்கும்போது உங்கள் குறைவுகள் நீக்கப்படும். **11இராஜாக் கள் 4:5 அவள் அவனிடத்திலிருந்து போய், தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக்கொண்டு, இவர்கள் பாத்திரங் களை அவளிடத்தில் கொடுக்க, அவள் அவைகளில் வார்த்தாள்.** எலிசா கொடுத்த ஆலோசனையின்படி, தேவனுடைய வார்த்தைக்கு அடங்கி விட்டுக்கொடுத்த போது அது நன்மை யாக மாறியது. இங்கும் ஒரு தனிமை. அறைவீட்டிற்குள் இருக்கின்றனர். அவர்களுடைய வாழ்க்கையில் இது வரை இருந்த குறைவு எல்லாம் அகன்றுபோனது. நீங்கள் விசுவாசி யுங்கள்! உங்கள் குறைவுகள் நீக்கப் பட ஆண்டவர் உங்களை தனிமை யாக வைத்திருக்கிறார். எண்ணெய் விற்று கடனை அடைக்க சொன்னார். **ஆண்டவர் உங்களை குறைவோடு வைத்திருப்பது உங்களை ஆசீர் வதிப்பதற்குத்தான். உங்களுடைய வாழ்வில் இதுவரை கிடைக்காத நன்மைகள் கிடைப்பதற்காக என்று சிந்தியுங்கள்.**

**11இராஜாக்கள் 4:1 தீர்க்க தரிசிகளுடைய புத்திரரில் ஒரு வனுக்கு மனைவியாயிருந்த ஒரு ஸ்திரீ எலிசாவைப் பார்த்து: உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான்: உமது அடியான் கர்த் தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்: கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்றாள்.** இன்னொருவன் அடிமையாக்கப்போகின்றான் - பெரிய இக்கட்டு, வேதனை. இந்த சந்தர்ப்பத்தில் தேவ மனுஷன் சொன்னது போன்று செய்ததால் அடிமைத்தனம் நீங்கப்பட்டது, கடன் அடைக்கப்பட்டது, குடும்பத்தில் மகிழ்ச்சி வந்தது. எப்படி இந்த கடனை அடைக்கப் போகின்றேன் என்று சிந்திக்கின்றீர்களா? ஆண்டவர் உங்களை தனிமையின் பாதையில் நடத்துவார், அதிசயம் செய்வார். தனிமையில் அவருடைய வார்த் தைக்கு கீழ்ப்படிந்து செய்யும் போது ஆசீர்வாதம் வரும். ஆண்டவருடைய வார்த்தையின்படி செய்து கொண்டி ருங்கள். உங்கள் வாழ்க்கையில் அற்புதம் - அதிசயம் செய்வார்.

## 03. சிலர் பார்வை அடைவதற்காய் தனிமையாக்கினார்.

**மாற்கு 8:23 அவர் குருடனு டைய கையைப் பிடித்து, அவனைக் கிராமத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டுபோய், அவன் கண்களில் உமிழ்ந்து, அவன்மேல் கைகளை வைத்து: எதையாகிலும் காண்கிறாயா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டார். கிராமத்தைவிட்டு வெளியே அழைத்துச் சென்று, அங்கு வைத்து சுகம் கொடுத்தார். சகோதரன் D.G.S.தினகரன் அவர்களுடைய இரட்சிப்பைக் குறித்து கேட்கின்ற போது: தன்னுடைய உயிரை மாய்த்துக் கொள்வதற்காக சென்ற போது தேவனுடைய சத்தத்தைக் கேட்டார். நீங்கள் அவ்வாறு செய்ய வேண்டாம். சிலர் சில காரியங்களை அறிந்து கொள்ள முடியாமல், மீண்டு கொள்ள முடியாமல்இருக்கின்றீர்களா? உங்களை அழைத்த தேவன் வேதனைக்குள்ளாக நீங்கள் செல்கின்ற நேரத்தில் தவறான தீர்மானம் எடுக்கலாம், எங்கே தெளிவான பார்வை அடைய முடியுமோ அங்கே தெளிவான பார்வையடைந்து கொள்ளுங்கள். தேவனுடைய அன்பை விட்டு தூரமாய் போகும் தவறான தீர்மானங்களை எடுக்க வேண்டாம்.

ஏன் தேவன் இப்படிப்பட்ட தனிமைக்குள்ளாய் கொண்டு செல்கின்றார்? ஏன் வியாதி இன்னும் மாறவில்லை? என்று சிந்தித்துக் கொண்டிருக்கலாம். உங்களுக்கு ஆண்டவர் சுகத்தை தருவார். நீங்கள் தேவனை அறிந்து கொள்ளவேண்டிய விதத்தில் அறிந்து கொள்வதற்காய், உங்களில் பலரை தேவன் தனிமையாக வைத்திருக்கிறார். உங்களை பார்ப்பவர்களெல்லாம் உங்களை ஏளனம் செய்யலாம். அல்லது எப்போது பார்த்தாலும் இவர்களுக்கு வியாதியாக இருக்கின்றது என்று சொல்லும் போது இது ஒரு ஒதுக்கப்பட்ட நிலை. ஆண்டவர் இதை எல்லாம் அனுமதித்தது உங்களுக்கு பெரிய நன்மையைத் தருவதற்காகவே. தேவன் சொல்கின்ற சத்தியத்தைப் புரிந்து எங்களுடைய வாழ்க்கையை ஆயத்தப்படுத்துகின்ற ஒரு தருணமாக இவைகளை மாற்றுவோம். அவரை நம்பி வாழப்போகிற வாழ்க்கை தரப்போகிறார். சிலர் குடும்பமாக தனிமையாக இருந்தாலும் மற்றவர்களால் புரிந்து கொள்ள முடியாது. இந்த நேரத்தில் ஏளனம் செய்வார்கள், வேதனைப்படுத்துவார்கள் என்பது ஒரு பக்கம். ஆனால் ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்: ஏன் அதை அவர்கள் சொல்கின்றார்கள் என்றால், கர்த்தர் அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார். ஏனென்றால் நாங்கள் கர்த்தரை துதித்து, அவருடைய அற்புதத்தை, ஆன்மீக அறிவை, நன்மையை பெற்றுக் கொள்வதற்கு கர்த்தர் இந்த தனிமையை அனுமதித்திருக்கிறார்.

## 04. ஆவியிலே பெலப்பட தேவன் தனிமையை அனுமதிக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் இயேசு கிறிஸ்துவினால் சந்திக்கப்பட்ட பிற்பாடு அவர் அரபி தேசத்தில் மூன்று வருடங்கள் தனிமையில் இருந்து கற்றுக் கொள்கின்றார். இயேசு தேவனோடு தனிமையாக இருந்து ஜெபித்தார். ஆகவே தனிமையின் நேரங்கள் ஆவியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெலப்படுகிற, உள்ளான மனிதன் சத்துவத்தைப் பெற்றுக்கொள்வதற் கான நேரங்களாகும். தனிமையான நேரம் நாங்கள் தேவனிடத்திலிருந்து கற்றுக் கொள்வதற்கான நேரம். தனிமையான நேரத்தில் வேதத்தை வாசித்துப் பாருங்கள். வேதபண்டிதர் களாக மாறிவிடுவீர்கள். அத்துடன் ஆவிக்குரிய நல்ல புத்தகங்களை வாசித்துப்பாருங்கள் ஆவியில் பெலப்படுவீர்கள். அப்போஸ்தலனா கிய பவுல் ஆரம்பத்தில் தேவனோடு சரியாக இருந்து கற்றுக்கொண்டு ஆவியில் பெலப்பட்டதால் அவனு டைய தலை வெட்டப்பட்ட போதும் இயேசுவுக்காய் தன்னை சந்தோஷ மாய் அர்ப்பணித்தார். நாம் தனிமை யாக இருக்கிறோம் என்றால் தீமைக் காக அல்ல அவற்றை நன்மைக்காக பயன்படுத்துவோம். பல காலம் கர்த்தர் உங்களுக்கு தனிமையை அனுமதிக்கி றார் என்றால் அதற்குள் வைத்து உங்களுக்கு தருவதற்கு ஆயத்தமாக இருக்கிறார். நீங்கள் அறிய வேண்டி யதை அறியும்படியாக உங்களை தனிமையாக வைத்திருக்கிறார்.

## 05. மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி எங்களை தனிமையாக வைத்திருக்கிறார்.

இதற்கு உதாரணமாக இயேசு கிறிஸ்துவையும், பவுலையும் சொல்ல லாம். இயேசு தனிமையாக இருந்து ஜெபம் பண்ணி இறங்கி வந்த போது வியாதிஸ்தரை சுகமாக்கினார், பசியாய் இருந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார். பவுல் சிறையில் இருந்த போது அநேக நிருபங்களை எழுதி னார். நாம் எப்படி கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்று கற்று அறிந்து கொண்டிருக்கின்ற நிருபங்களெல் லாம் சிறையிலிருந்து எழுதப்பட்டது. தனிமையாக இருக்கும் போது ஆவிக் குரிய பாடல்களைப்பாடி ஆண்டவரை துதியுங்கள். இரண்டு கண்களிலும் பார்வை இழந்த பனிக்குறஸ் என்ற அம்மையார் 8000ற்கும் மேற்பட்ட பாடல்களைப்பாடி மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தார். இவர் தனது ஐந்து வயதிலேயே பார்வையை இழந்தார். தனது 96ஆவது வயதிலே கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் தனது சிறுபிராயத்தில், வாலிப, முதிர்வயது காலங்களிலும் ஆண்ட வருக்காய் வாழ்ந்து, மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாய் இருந்தார். ஏன் உங்களுடைய வாழ்க்கையின் தனிமை களும் மற்றவர்களுக்கு ஆசீர்வாத மாய் இருக்கக் கூடாது? தனிமையாய் இருக்கும் போது கர்த்தருடைய வார்த் தையை மனப்பாடம் செய்யுங்கள்.

## 06. தேவனோடு உறவாடி ஜெபிப்பதற்காய் தனிமையை அனுமதிக்கிறார்.

தனிமையில் இருக்கும் போது அவரை போற்றிப்பாடி, துதியுங்கள். எப்போது ஜெபித்தீர்கள் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டால் சிலர் யோசிப்பார்கள். என்னைக் குறித்து தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். ஒரு சகோதரி கூறினார்: நான் இந்திய தேசத்திற்கு சென்ற போது ஆண்டவரை உண்மையாக ஏற்றுக் கொண்டேன். 20வருடங்களுக்கு பிற்பாடு வந்த போது எனது அம்மா, சகோதாரர், சகோதரிகள் யாரும் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த சகோதரி சத்தியத்தை அறிந்ததால் அவரை புறம்பாய் தள்ளிவிட்டார்கள்.

தேவனோடுள்ள உறவுக் காய்தான் இந்த தனிமை, பிரிவு. வேதத்தின்படி நீங்கள் சரியாக இருந்தால், வேதநடைமுறையில் லாததை நடைமுறைப்படுத்துவதற் காகவும் உங்களை கைவிட்டிருந்தால் நீங்கள் கலங்கத் தேவையில்லை. இந்த தனிமை தேவனோடு இன்னும் நெருங்கிச் சேர தேவ பிரசன்னத்திற் குள் போய் எல்லா கவலைகளையும் மறந்து தேவனோடு உறவாடுவதற் கான நேரமாய் இருக்கிறது. சாது சுந்தர் சிங் என்ற தேவ மனிதர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபோது, அவர் தங்களு டைய மதத்திற்கு, இனத்திற்கு துரோகம் செய்ததாக அதனை அசிங்கமாக கருதி அவருடைய குடும்பத்தைவிட்டு அவரை துரத்தி விட்டார்கள். ஆனால் அவர் தேவ னோடு உறவாடி காடு, மேடெல்லாம் தாண்டி தனிமையாக கர்த்தருக்காய் வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரைய டைந்தார். முடிந்தால் சாது சுந்தர் சிங் என்ற புத்தகத்தை வாசித்துப் பாருங்கள்.

ஆகவே தனிமையின் - வேதனையின் - ஒதுக்கப்பட்ட நிலை யின் நேரங்களை தேவனோடு நெருங் கிச் சேரும் நன்மையின் நேரமாக மாற்றிக் கொள்ளுங்கள்.

01. உயிர்மீட்சி பெற்றுக் கொள்ள சில வேளை தனிமையின் அனுபவத்திற் குள் ஆண்டவர் கொண்டு செல்வார்.

02. குறைவுகள் நீக்கப்பட ஆண்டவர் எங்களை தனிமையாக வைத்திருக் கிறார்.

03. சிலர் பார்வையடைவதற்காய் தனிமையாக்கினார்.

04. ஆவியிலே பெலப்பட தேவன் தனிமையை அனுமதிக்கிறார்.

05. மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி எங்களை தனிமையாக வைத்தி ருக்கிறார்.

06. தேவனோடு உறவாடி ஜெபிப்பதற் காய் தனிமையை அனுமதிக்கிறார்.

'தேவன் தாமே உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக'






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி – 118

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

01. மேவிபோசேத் (IIசாமுவேல் 9:8)
07. வாஞ்சை (நீதிமொழிகள் 13:19)
09. சீகோன் (நியாயாதிபதிகள் 11:20)
10. குப்பைமேடு (எஸ்றா 6:11)
14. எஸ்றா (எஸ்றா 9:3)

**வலமிருந்து இடமாக**

03. எசேக்கியேல் (எசேக்கியேல் 1:3)
05. செல்சாகில் (Iசாமுவேல் 10:2)
06. யாகேலின் (நியாயாதிபதிகள் 4:9)
09. சீலோவாம் (யோவான் 9:7)
11. சிட்சை (நீதிமொழிகள் 19:18)
12. காதியேல் (எண்ணாகமம் 13:10)
15. ஆரியோகு (தானியேல் 2:14)

**மேலிருந்து கீழாக**

02. நெகேமியா (நெகேமியா 2:18)
04. கில்போவா (Iநாளாகமம் 10:1)

**கீழிருந்து மேலாக**

08. யோயாக்கீம் (IIஇராஜாக்கள் 23:34)
13. கழுகுகளை (IIசாமுவேல் 1:23)
14. எகிப்து (உபாகமம் 4:20)
15. ஆகாசின் (IIஇராக்கள் 20:11)



# குறுக்கெழுத்துப் போட்டி - 118, வினா விடை - 120

## சரியான விடை எழுதியவர்கள்

**தர்மபுரம்**

01. சி.வளவன் +
02. பி.சுவர்ணன்
03. ஜா.ஜொலிற்றா வில்மா
04. ச.விதுர்ஷிகா
05. நி.றொபினா
06. நி.அருட்செல்வி
07. உ.கிறேஸ் அனா
08. த.சுஜீனா
09. வி.வசீகலா
10. வி.வானுசன்
11. வி.வசீகரன்
12. ஜா.ஜோன் வெஸ்லி*
13. பி.கலைச்சுடர்
14. ச.வனிதா
15. உ.யாபேஸ்
16. பி.புகழ்நிலா

**புங்குடுதீவு**

17. த.சனுஜா

**காரைநகர்**

18. ர.தர்சிகா

**கனடா**

19. குகன் +

**திருநெல்வேலி**

20. S. செல்வன்

*வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
+குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாவிடை 120
### சரியான பதில்கள்

01. அதோனிபேசேக் - நியாயாதிபதிகள் 1:6,7

02. ஆகான் - யோசுவா 7:25,26

03. எலிசாவைப் பிடிக்க வந்த சீரியர் - 11இராஜாக்கள் 6:18-20

04. எரேமியா 51:6

05. அம்மோன் ராஜா - 11சாமுவேல் 12:29-30

06. யோசுவா - யோசுவா 10:12-14

07. எரேமியா 8:16

08. நீதிமொழிகள் 27:23

09. பெலிஸ்தர் - நியாயாதிபதிகள் 15:6

10. சகரியா - சகரியா 5:7

---

**மத்தேயு 5:1-12 (1.) அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். 2. அப்பொழுது அவர் தமது வாயைத்திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்: 3. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். 5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். 6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். 7. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். 8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். 9. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். 10. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 11. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; 12. சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னிப்போம்: மறப்போம்!

**வேதப்பகுதி: எபேசியர் 4:25-32**

கிரிக்கெட் விளையாடும் போது அன்புமணிக்கும் அகஸ்டினுக்கும் சண்டை வந்தது. அகஸ்டின் ஆத்திரத்தில் அன்புமணியை அடித்துவிட்டான். பின்னர் அகஸ்டின் அன்புமணியிடம் மன்னிப்பு கேட்டான். 'சரி' என்றான் அன்புமணி. ஆனால் அதற்கு பின்பு அன்புமணி அகஸ்டினிடம் பேசுவதே இல்லை. அவனை கிரிக்கெட் டீமில் சேர்ப்பது மில்லை.

சிறுவர்கள் மத்தியில் ஊழியம் செய்யும் செல்வராஜ் அன்புமணியிடம் பேசினார். நீ மன்னித்துவிட்டது நல்லது. ஆனால் அகஸ்டின் செய்ததை மறக்க வேண்டும். மறுபடியும் அவனிடம் பேசி அவனையும் டீமில் சேர்க்க வேண்டும். அப்பொழுது தான் நீ மன்னித்ததற்காக கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார் என்றார். அன்புமணி ஏற்றுக்கொண்டான்.

பிறருடைய தவறை மன்னிப்பதோடு அதனை மறு படி நினைக்காமலுமிருக்க வேண்டும். அவர்களோடு அன்புடன் நடந்து கொள்ள வேண்டும். கர்த்தர் நம்மை மன்னித்தார். நாம் செய்ததை மறந்தார். நம்மிடம் அன்பு காண்பிக்கிறார்.

**சிந்தனைக்கு:-**

**மன்னிக்க வேண்டியது நமது கடமை. ஆனால் பழையதை மறுபடி நினைக்காமல் அவர்களை நேசிக்கவும் வேண்டும்.**

நன்றி: 'சின்னஞ்சிறு இதயங்களே கேளுங்கள்' – நவம்பர் 19

## அனல் சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

(காசோலை, காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட

Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை (Sri Lanka) | 660.00 |
| இந்தியா (India) | 1200.00 |
| கனடா, அமெரிக்கா (Canada & USA) | 1400.00 |
| சிங்கப்பூர், மலேசியா (Singapore & Malaysia) | 1200.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் (Middle East Countries) | 1500.00 |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா (Germany, England, Italy & Australia) | 1500.00 |

*சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.*

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:.......................................

முகவரி:.......................................

.......................................

.......................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org